**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**
**<u>அ.வ.எண்.302/2023</u>**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம்19-ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புஷ்பலதா | தொழில் | |
| த/பெ | மகேஸ்குமார் | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| | | மாவட்டம் | |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

17.02.1982 தேதியிட்ட பாகசாசனத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.1, EP 394/2018 வழக்கில் வழங்கப்பட்ட ஏலச்சான்று பதிவு நகல் வா.சா.ஆ.2, EP No.56/98 மனுவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 EA 458/1991 EP 394/1988 விற்பனை ரசீது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4, 05.09.2011 தேதியிட்ட கிரையபத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.5, 11.02.2014 தேதியிட்ட தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் கணினி நகல் வா.சா.ஆ.6, ராமசாமிகவுண்டர் என்பவரது இறப்பு சான்று வா.சா.ஆ.7, ராமசாமி கவுண்டர் என்பவரது வாரிசு சான்று வா.சா.ஆ.8, பட்டா எண். 756 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.9, புல எண்.216/3 க்கான ஆபதிவேட்டு விவரங்கள் கணினி நகல் வா.சா.ஆ.10, பட்டா எண்.603 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.11, புல எண். 290/2 ஆபதிவேட்டு விவரங்கள் கணினி நகல் வா.சா.ஆ.12, அசல் வழக்கு எண். 393/2010 க்கான Suit Extract சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13, ஈஸ்வரி என்பவரது பெயரிலான பாஸ்புத்தகம் வா.சா.ஆ.14, 05.09.2011 தேதியிட்ட கிரையபத்திரத்தின் அசல் வா.சா.ஆ.15, தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகள் ஆகிய நாங்கள் மூவரும் ராமசாமி என்பவரது பெண்மக்கள்

என்று சொன்னால் சரிதான். ராமசாமியின் தகப்பனார் பெயர் பெரியசாமி ஆகும். பெரியசாமிக்கு என்னுடைய தகப்பனார் மற்றும் என்னுடைய அத்தை வள்ளியாத்தாள் ஆகியோர் வாரிசுகளாகும். பிரதிவாதிகள் இருவரும் என்னுடைய அத்தையின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். பத்திரத்தில் இருந்து என்னுடைய அத்தை பெயரை நீக்குவதற்காக நான் வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்துக்கள் வடுகபாளையம் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் என்னுடைய தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் தற்போது ஒன்பது ஏக்கர் ஆகும். தாவா சொத்துக்கள் வேறு வேறு காலைகளில் அமைந்துள்ளது. தாவா சொத்து அமைந்துள்ள காலை எண்கள் எனக்கு தெரியாது.

2. தாவா சொத்துக்கள் என்னுடைய தாத்தாவுக்கு கடந்த 17.02.1982 தேதியிட்ட பாகக்கரார் படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்துக்களில் என்னுடைய தகப்பனாருக்கும் என்னுடைய அத்தைக்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் 1984 ஆம் வருடம் பிறந்தேன். 1970 ஆம் வருடம் தை மாதம் என்னுடைய தந்தை என்னுடைய அத்தைக்கு ரூபாய் 30 ஆயிரம் கொடுத்ததற்கு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து நினைவில்லை. யார் முன்னிலையில் மேற்படி தொகை கொடுக்கப்பட்டது என்பது குறித்து நான் என்னுடைய வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 1983 ஆம் வருடம் ரூபாய் ஒரு லட்சம் கொடுக்கப்பட்டதற்கும் ஆவணம் எதுவுமில்லை என்று சொன்னால் எனக்கு அது குறித்து தெரியாது.

3. என்னுடைய தகப்பனார் ராமசாமிக்கு இரண்டு மனைவிகள் என்றாலும் நான் இரண்டாம் தாரத்து மகள் என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண். 393/2010 வழக்கில் பிரதிவாதிகள் என்ன பரிகாரம் கோரியிருந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு யார் மீது தாக்கல் செய்யப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கு எந்த நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டது என்ற விபரமும் எனக்கு

தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்கண்ட விபரங்களை நான் தெரிவித்துள்ளேனா என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு என்னுடைய தந்தை வா.சா.ஆ.7 செட்டில்மெண்டை எழுதி வைத்தார். மேற்படி சொத்து என்னுடைய தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். என்னுடைய அத்தை என்னுடைய தாத்தாவின் சொத்துக்களில் தனக்கு பாகம் வேண்டாம் என்று எழுதி கொடுத்திருப்பதாக என்னுடைய அப்பா குறிப்பிட்டார் அதற்கு ஆதாரம் உண்டா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் பெரியசாமி என்பவரது வாரிசுகள் என்பதால் அவர்களும் தாவா சொத்தை அனுபவிக்கலாம் என்று சொன்னால் சரிதான். அவர்கள் பணம் வாங்கிக்கொண்டு செட்டில்மெண்ட் செய்து கொண்டார்கள்.

4. 1–ம் பிரதிவாதி என்னுடைய அப்பா உயிரோடு இருந்தபோதே ஒரு பாகத்தை விற்று தன்னுடைய தொகையை எடுத்துக் கொண்டார். மேற்படி ஈஸ்வரமூர்த்தி நிலத்தை விற்றது தொடர்பாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அவ்வாறு எந்த விதமான சொத்தும் விற்பனை செய்யப்படவில்லை என்றாலும் வழக்குக்காக விற்பனை செய்யப்பட்டு விட்டதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டக்காரரிடம் பைசல் பேசி ரூபாய் 75 ஆயிரம் 1–வது பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆவணம் எழுதி வாங்கப்பட்டது. அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் குறிப்பிடுவது போல எந்தவிதமான தொகையும் கொடுக்கப்படவில்லை என்றாலும் அதற்கான ஆவணம் எதுவும் எழுதப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

5. வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு அவர்களது பாகம் தொகையாக கொடுக்கப்பட்டு விட்டது என்று குறிப்பாக எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்டது போல தொகை கொடுக்கப்பட்டிருந்தால் மேற்படி வாசகங்கள் மேற்படி ஆவணத்தில்

எழுதப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் சிறுவர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவிப்பதை இடைஞ்சல் செய்வதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் உள்ளது என்றாலும் அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் அதை இடையூறு செய்வதற்கு எனக்கு முகாந்திரம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரி இல்லை நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று விபரமே எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இன்று வரையில் தாவா சொத்துகளில் பிரதிவாதிகளும் சுவாதின அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு உள்ள பாத்தியத்தை நான் ஆட்சேபிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.19 18:34:24 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.